# இலங்கை வாழ் தெலுங்கு சமூகத்தினரை ஆவணப்படுத்தல்

## அறிமுகமும் பின்புலமும்

நூலக நிறுவனமானது இலங்கைத் தமிழ்பேசும் சமூகங்கள் தொடர்பான எல்லா வகையான அறிவுத் தொகுதிகளையும் மரபுரிமைகளையும் ஆவணப்படுத்திப் பாதுகாத்து இலவசமாகத் திறந்த வெளியில் அனைவரும் பயன்பெறும் வகையில் கிடைக்கச்செய்யும் முக்கிய பணியை மேற்கொள்ளும் இலாப நோக்கமற்ற நிறுவனமாகும். 2005 முதல் திறந்த, கூட்டுச் செயற்பாட்டை முன்னிறுத்திச் செயற்பட்டு வரும் நூலக நிறுவனம் இலங்கைத் தமிழ் பேசும் சமூகங்கள் தொடர்பான ஒரு முதன்மையான உசாத்துணைத் திரட்டினை உருவாக்கியுள்ளது. பல்வேறு செயற்றிட்டங்கள் மூலம் ஆவணப்படுத்தற் பணிகளை முன்னெடுத்து வருகிறது.

அச்சு ஆவணங்களின் எண்ணிம வடிவங்கள் www.noolaham.org வழியாகவும் பல்லூடக ஆவணங்கள் www.noolaham.media வழியாகவும் திறந்த வெளியில் அனைவருக்கும் இலவசமாக வழங்கப்படுகின்றன. எழுத்தாவணங்களில் நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள், சிறுநூல்கள், மலர்கள், நினைவு மலர்கள் ஆகியனவும் பல்லூடக ஆவணங்களில் ஒளிப்படங்கள், வாய்மொழி வரலாறுகள், பல்லூடக ஆவணங்கள், ஒலிப்பதிவுகள், காணொலிகள், கையெழுத்து ஆவணங்கள், குறுங்கால ஆவணங்கள், கல்வி வளங்கள் போன்றனவும் உள்ளடங்குகின்றன. இந்த ஆவணங்கள் பல்வேறு சிறப்புச் சேகரங்களாகவும் ஆய்வுப்பொருட் சேகரங்களாகவும் தொகுக்கப்பட்டுக் காட்சிப்படுத்தப்படுகின்றன.

## செயற்றிட்ட அறிமுகம்

இலங்கையில் தெலுங்கு மக்கள் அம்பாறை, திருகோணமலை, அனுராதபுரம், யாழ்ப்பாணம், வவுனியா, கண்டி , கொழும்பு போன்ற பகுதிகளில் வாழ்ந்து வருகின்றனர். அம்பாறை மாவட்டத்தில் அதிகளவில் அலிகம்பை எனும் ஊரில் இவர்கள் சமூகம் வாழ்ந்து வருகிறது. இந்தியா தமிழகத்தில் முஸ்லிம் மன்னர்களை தோற்கடித்து தெலுங்கு மன்னர்கள் ஆட்சி செய்த காலங்களில் இலங்கைக்கு அவர்கள் குடியமர்த்தப்பட்டிருந்தார்கள். அதன் பின்னர் பிரிட்டிஷ் காலத்தில் வன்முறைகள் பலவும் நிகழ்ந்ததால் தெலுங்கு மக்கள் தப்பியோடி பல நாடுகளில் தஞ்சம் அடைந்து வாழ்ந்தனர். அதன் பின்னரே ஊருக்குள் வந்து சக மனிதர்களோடு பழகி குடிசைகள் அமைத்து வாழத்தொடங்கினர். சமகாலத்தில் அவர்கள் தமது கல்வி மற்றும் தொழில் முயற்சிகளை அடிப்படையாக கொண்டு மேம்பட தொடங்கியுள்ளார்கள். இவர்களை தமிழர்கள் என்று தான் இலங்கை அரசு அடையாளப்படுத்துகிறது.

## செயற்றிட்ட நோக்கம்

இலங்கையில் உள்ள தெலுங்கு சமூகத்தினர் மற்றும் அவர்களது அடையாளம் , வரலாறு என்பவற்றை பாதுகாத்து அச்சமூகம் தொடர்பான வரலாற்றினையும் ஆவணப்படுத்தல்.

## செயற்றிட்ட அடைவுகள்

இலங்கை வாழ் தெலுங்கு சமூகத்தினர் தொடர்பான வரலாற்றை கண்டறிவதோடு அவர்களது வாழ்க்கை முறை , கலாசார பாரம்பரியங்கள் என்பவற்றை ஆவணப்படுத்துவதுடன், அச்சமூகம் சார் மக்களது வாய்மொழி வரலாற்றை பெறல்.

## செயற்றிட்ட காலவரையறை

இச் செயற்றிட்டமானது ஒரு வருட காலப்பகுதியைக் கொண்டுள்ளது. இக்காலப்பகுதிக்குள் இச் சமூகம் சார்ந்த ஆவணங்கள் மற்றும் வாய்மொழி வரலாறுகள் என்பவை ஆவணப்படுத்தப்பட்டு இச்செயற்றிட்டம் பூரணப்படுத்தப்படும்.

## எதிர்பாக்கப்படும் செலவீனம்
**LKR 5,476,332**

மேலதிக விபரங்களுக்கு
**https://docs.google.com/spreadsheets/d/1AKawT6TUJngsNqaIigpdR5Gm4PiZ6FnAWUw4YVRSM8A/edit#gid=1017615132**